**செய்தி வெளியீடு எண்: 924** **நாள்: 14.12.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

**<u>சேலம் மாவட்டம், வீரகனூரில் இன்று (14.12.2018) நடைபெற்ற, முப்பெரும் விழாவில் (புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சி சிறப்பாக, எழுச்சியாக, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் இந்த வீரகனூர் பகுதி மக்கள் கெங்கவல்லி ஒன்றியத்திலிருந்து, பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்து, சாலையின் இருபுறங்களிலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அத்தனை பேரும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து, இன்றைக்கு, முப்பெரும் விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா. ஆகவே, இந்த நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்து வீரகனூர் பேரூராட்சிப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த ஆட்சியிலே என்ன நடக்கிறது ? என்ன திட்டங்களை நிறைவேற்றுகின்றார்கள் ? நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்றெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள், பொய்யான பிரச்சாரத்தை மக்களிடத்திலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு என்ன சாதனைகளை செய்திருக்கின்றது என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிந்து கொள்ளமுடியும். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, ஊரக வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக்கல்வித் துறை, கூட்டுறவுத் துறை, பேரூராட்சிகள் துறை, மீன்வளத் துறை, வருவாய்த் துறை, சமூக நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மகளிர் திட்டம், வனத் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தாட்கோ, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, பால்வளத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறை என்று 21 துறைகளில், இந்த ஒன்றியப் பகுதியில், ஆத்தூர் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மட்டும், கிட்டத்தட்ட 27,092 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்குகின்றோம். ஒரு அரசு எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கு இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவே ஒரு சான்று என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, இன்றைக்கு அரசு அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகியவற்றிற்காக, மக்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 131 கோடியே 51 இலட்சத்து 608. ஆக, அரசு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குத் தேவையான நன்மைகள் போய் சேர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் வீரகனூரில் நடைபெறுகின்ற இவ்விழாவில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலை

உறுதித் திட்டத்தின் கீழ், ஏற்காடு, கூத்தமுத்தல் முதல் கோவிலூர் வரை ரூபாய் 4 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி.

மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவம் மற்றும் நலப் பணிகள் சார்பில் நிறைய திட்டங்கள்.

கூட்டுறவுத் துறையின் சார்பில், கெங்கவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திட்டச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன கட்டடம்.

பேரூராட்சிகள் துறையின் சார்பில், பேளூர் பேரூராட்சியில், மூலதன மானிய நிதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் நவீனமயமாக்கும் பணி. வீரகனூர், பேளூர், கெங்கவல்லி, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி, தெடாவூர், கீரிப்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி ஆகிய பேரூராட்சிகளில் ரூபாய் 8 கோடியே 30 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை வசதிகள், தெருவிளக்கு, குடிநீர், கழிப்பிட வசதிகள் உள்ளிட்ட 21 புதிய திட்டப் பணிகள் இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் செயல்படுத்தப்பட இருக்கின்றன.

மீன்வளத் துறையின் சார்பில், மேட்டூர் நகராட்சிப் பகுதியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் தூய ரோகு இன சினை மீன் பாதுகாப்பு மற்றும் சினை மீன்களை பெருக்குதலுக்கு புதிய மையம் அமைக்கும் பணி என மொத்தம் ரூபாய் 35 கோடியே 41 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் 31 பணிகளுக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் மாவட்ட ஊரக முகமையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியங்களில்,

சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி மேம்பாடு மற்றும் தாய்–II திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் 9 முடிவுற்ற திட்டப் பணிகளும்,

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மருத்துவம் மற்றும் நலப்பணிகள் சார்பில், ஆத்தூர் அரசு மருத்துவமனை ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய டயாலிசிஸ் இயந்திரமும் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 10 முடிவுற்றப் பணிகள் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நலத்திட்ட உதவிகளை பொறுத்தவரை, இன்றைக்கு 100 பயனாளிகளுக்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் தலா 1.70 இலட்சம் வீட்டுத் திட்டத்திற்கான மானியம், 400 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் பணி, 1500 பயனாளிகளுக்கு தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கான மானியம் என மொத்தம் 3,000 பயனாளிகளுக்கு ரூபாய் 28 கோடியே 90 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள்.

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் 12,366 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 4 கோடியே 59 இலட்சத்து 38 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள்.

கூட்டுறவுத் துறையின் சார்பில், 5801 நபர்களுக்கு பயிர்க் கடனுதவி, 506 நபர்களுக்கு மத்திய காலக் கடனுதவி, 99 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி, 616 நபர்களுக்கு சுயஉதவிக் குழு கடனுதவி, 11 நபர்களுக்கு தனிநபர் கடனுதவி, 126 நபர்களுக்கு வீட்டு அடமான கடன் மற்றும் இதர கடனுதவி என மொத்தம் 7159 பயனாளிகளுக்கு ரூபாய் 50 கோடியே 98 இலட்சத்து 77 ஆயிரம் பல்வேறு கடனுதவிகள் வழங்குகின்ற விழா.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் **286** பயனாளிகளுக்கு ரூபாய் **1** கோடியே **46** இலட்சத்து **82** ஆயிரம் வீடு கட்டுவதற்கான நிதியுதவியும்,

வருவாய்த் துறை சார்பில், **907** நபர்களுக்கு பழங்குடியினருக்கான சான்றிதழ்கள், **315** நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், **83** நபர்களுக்கு கல்வி உதவித் தொகை, **76** நபர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட இயற்கை மரண உதவித் தொகை, **20** நபர்களுக்கு திருமண உதவித் தொகை, **47** நபர்களுக்கு இயற்கை மரண உதவித் தொகை, **10** நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை, **8** நபர்களுக்கு விபத்து நிவாரண உதவித் தொகை, **6** நபர்களுக்கு விதவை உதவித் தொகை, **4** நபர்களுக்கு விவசாய கூலி உதவித் தொகை என மொத்தம் **1,476** நபர்களுக்கு ரூபாய் **85** இலட்சத்து **68** ஆயிரம் மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகள்.

சமூக நலத் துறையின் சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் **571** மகளிருக்கு ரூபாய் **3** கோடியே **63** இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு **8** கிராம் தங்கமும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், **500** பயனாளிகளுக்கு ரூபாய் **64** இலட்சத்து **75** ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தலா **4** வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும்,

மகளிர் திட்டத்தின் சார்பில், உழைக்கும் மகளிருக்கு, அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் **103** மகளிருக்கு மானியமும், **1** மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு நேரடி கடனுதவியும், **396** மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியும், என மொத்தம் **500** மகளிருக்கு ரூபாய் **47** இலட்சத்து **75** ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

வனத் துறையின் சார்பில், 100 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மூங்கில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் உபகரணம்.

வேளாண்மைத் துறை சார்பில், 500 விவசாயிகளுக்கு ரூபாய் 33 இலட்சத்து 53 ஆயிரத்து 900 மதிப்பிலான சொட்டு நீர் பாசனக் கருவி, விசைத் தெளிப்பான், தார்ப்பாலின், ரொட்டவேட்டர், கூட்டுப் பண்ணைத் திட்ட நிதியுதவி, விதைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

தோட்டக்கலைத் துறை சார்பில், 400 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 60 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் மண்புழுக் கூடம், தக்காளி நாற்றுகள், சொட்டுநீர்ப் பாசனம், இயற்கைப் பண்ணையம் அமைத்தல், தேனீ வளர்ப்புப் பெட்டி, பவர் டிரில்லர், மினி டிராக்டர் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

வேளாண் பொறியியல் துறை சார்பில், 3 விவசாயிகளுக்கு ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைப்பதற்கான மானியம்.

பட்டு வளர்ச்சித் துறை சார்பில், 4 பயனாளிகளுக்கு ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் மல்பெரி நடவு மானியம் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான மானியம், தாட்கோ மூலம் 1 பயனாளிக்கு ரூபாய் 9 இலட்சத்து 94 ஆயிரத்து 800 மதிப்பீட்டில் பொலிரோ வாடகை வாகனம் வாங்குவதற்கான நிதியுதவி.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், 101 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 19 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பிலான அதிநவீன செயற்கைக் கால் மற்றும்

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பராமரிப்பு உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணை.

பால்வளத் துறை சார்பில், வீரகனூர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ரூபாய் 30 இலட்சத்து 61 ஆயிரம் மதிப்பீட்டில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான் மையமும், 6 உறுப்பினர்களுக்கு சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கான ரூபாய் 18 ஆயிரத்து 500 பரிசுத் தொகை மற்றும் ஊக்கத் தொகை.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 30 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில், 10 நபர்களுக்கு ரூபாய் 93 ஆயிரத்து 600 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்கள்.

பழங்குடியினர் நலத் துறை சார்பில், 78 நபர்களுக்கு தனி நபர் என வன உரிமைப் பட்டா மற்றும் சமுதாய வன உரிமைப் பட்டாக்களும் என மொத்தம் இன்று நடைபெறுகின்ற இந்த விழாவில் 27 ஆயிரத்து 92 பயனாளிகளுக்கு ரூபாய் 94 கோடியே 55 இலட்சத்து 26 ஆயிரத்து 800 மதிப்பிலான பல்வேறு நலத்திட்டப் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலும் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அரசு எப்படி செயல்படுகிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் புள்ளிவிவரத்தோடு சொல்கின்றேன்.

எப்பொழுது பார்த்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியில் என்ன நடக்கின்றது ? ஒன்றுமேயில்லை, இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை, மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். நான் கூறியதைப்போல், 27 ஆயிரத்து 92 நபர்களுக்கு இந்தப் பகுதியிலிருப்பவர்களுக்கு உதவி செய்கிறோம் என்றால், மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை பார்த்துப் பார்த்து செய்கின்ற அம்மாவினுடைய அரசு எப்படி செயல்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் செயல்படுகின்ற அரசு. அம்மா இருக்கும்பொழுதும் செயல்பட்டார், அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா எப்படி செயல்பட்டார்களோ அதே வழியை பின்பற்றி, அம்மாவினுடைய அரசும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், 2011–க்கு முன்பு திமுக ஆட்சியில் கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி எப்படி இருந்தது ? 2011–க்குப் பிறகு அம்மா ஆட்சி மலர்ந்த பிறகு, அம்மா முதலமைச்சரான பிறகு, எப்படி இந்த ஆட்சி செயல்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிறகு, அம்மா மறைவிற்குப் பிறகு கிட்டத்தட்ட 1 வருடம் 10 மாத காலமாக எப்படி ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் எந்த ஆட்சியில் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். அம்மா வழியில் அரசு இன்றைக்கு செய்கின்ற சாதனைகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊராட்சி ஒன்றிய சாலை, மாவட்ட ஒன்றிய சாலையாக தரம் உயர்த்தி, மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ், ரூபாய் 1 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் மல்லிக்கரை முதல்

கருத்தராஜபாளையம் செல்லும் சாலை 3.15 கிலோமீட்டர் நீளத்திற்கு மேம்பாலப் பணி மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி சின்ன சமுத்திரம் ஆதிதிராவிடர் காலனி சாலையில் ரூபாய் 6.60 கோடி மதிப்பீட்டில் பஸ் நிலையம் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கின்றது. காந்தி நகரம் முருகன் கோயில் சாலையில் பஸ் நிலையம் குறுக்கே ரூபாய் 5.25 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கியின் அனுமதிக்கு அனுப்பப்பட்டது, விரைவில் அனுமதி பெறப்பட்டவுடன் இந்தப் பணி துவங்கும்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பனைமடை கிராமத்தில் கல்லாறாற்றின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி, ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது, விரைவில் இப்பணி துவங்கப்படும்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், ஏத்தாப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1.66 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 8 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிப்பறைகள், குடிநீர் வசதி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் பணி துவங்கப்படும்.

ஆத்தூர் வட்டம் வடசென்னிமலை கிராமத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ரூபாய் 6 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கலையரங்கம் அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படவுள்ளது.

மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் 2018–2019–ஆம் ஆண்டு திட்டத்தில் ஆத்தூர், அம்மாபாளையம், நரிக்குறவர் காலனி சாலையில் நதியின் குறுக்கே ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் 2018–2019–ஆம் ஆண்டு திட்டத்தில் அயோத்திப்பட்டணம், தும்பல் அருகில் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணி மேற்கொள்ளப்படும்.

ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி ஆண்டு திட்டத்தின் கீழ், தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர், பெரம்பலூர், ஆத்தூர் சாலையில் பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 54.80 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் 7 மீட்டர் அகலத்திலிருந்து 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக செய்யும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, பிறகு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தொடங்கி, இந்த சாலை விரிவாக்கம் செய்யப்பட்டு போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையாக உருவாக்கித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி தெடாவூர் பேரூராட்சி, தெடாவூர் தெற்கு மணக்காடு சாலை 0/2–ல் மாரியம்மன் கோவில் அருகில் சுவேதா நதியின் குறுக்கே ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட இதர சாலையாக தரம் உயர்த்த, மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி நகர், தம்மம்பட்டி 2.20 கிலோமீட்டர் தூரம் நிள சாலை மேற்கொள்ளப்படும்,

ரூபாய் 1.70 கோடி மதிப்பீட்டில் தம்மம்பட்டி, தெடாவூர் சாலையில் நடுவலூர் செல்லும் 3 கிலோ மீட்டர் தூரம் செல்லும் சாலையில் ரூபாய் 5.45 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசிதழில் வெளியிடப்பட்டு, முதல் கட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணி முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டு பாலப் பணிகள் துவங்கப்படும். தலைவாசல், மும்முடிச் சாலையில் ரூபாய் 5 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் மற்றும் திட்டச்சேரி முதல் முத்துவாடி சாலை வரை **உ**யர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது, திட்ட அறிக்கை கிடைத்தவுடன் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு பாலப் பணிகள் துவங்கப்படும். கெங்கவல்லி வட்டம், நத்துவாடி கிராமத்தில் நதியின் குறுக்கே ரூபாய் 2 கோடியே 43 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படும். கெங்கவல்லி வட்டம், கூடலூர் கிராமத்தில் ஸௌபர்னிகா நதியின் குறுக்கே காளியம்மன் கோவில் முன்புறம் ரூபாய் 1.88 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பிரிசீலனையில் உள்ளது, விரைவில் இப்பணி தொடங்கப்படும். கெங்கவல்லி வட்டம், வீரகனூர் பேரூராட்சி, சொக்கானூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னாளியம்மன் கோவிலில் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது, விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்பணி நிறைவு பெற்ற பிறகு இந்த ஏரிக்கு அருகிலுள்ள நிலத்திலுள்ள அந்த கிணறுகளிலெல்லாம் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கும், குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கும். சேலம் மாவட்டத்தில் கெங்கவல்லி தொகுதியில்தான் அதிக பாலங்கள் கட்டுகிறோம். இப்பொழுது நான் அறிவிக்கப்பட்ட பாலங்கள், தடுப்பணைகள் போன்ற

பணிகள் நிறைவு பெறுகின்றபொழுது கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி, மற்ற தொகுதிகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் கேட்டதையெல்லாம் நாங்கள் செய்துகொண்டே இருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிக்கு மட்டும் கண்ணுக்கு தெரியவில்லை. இவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபொழுது தமிழ்நாட்டிற்கு ஏதாவது நன்மை கிடைத்ததா என்றால், இல்லை, குடும்ப ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. முதலில் பாரதீய ஜனதா கூட ஆட்சியில் இருந்தார்கள், அப்பொழுது முரசொலி மாறன் அமைச்சர் பதவியில் இருந்தார். அந்தக் கட்சி செல்வாக்கை இழந்தவுடன், காங்கிரஸிற்கு தாவி விட்டார்கள், பின்னர் மந்திரி பதவியை பெற்றார்கள், அப்பொழுதும் தமிழ்நாட்டிற்கு ஒன்றும் செய்யவில்லை. காவிரி நதிநீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாறு பிரச்சினை தீர்த்திருக்கலாம், ஒன்றையும் தீர்க்கவில்லை. தடுப்பணை கட்டினீர்களா, இல்லை, எதுவுமே செய்யவில்லை. ஆனால் நம் சிறப்பான ஆட்சியில், எதையுமே செய்யவில்லை என்று ஒரு பொய்யான பிரச்சாரத்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்குத் தேவையான திட்டங்களை வகுத்து கொடுக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை திட்டத்தை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற திட்டத்தை கொண்டுவந்து, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண் அள்ளப்பட்டு விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்துகிறார்கள். கடந்த ஆண்டு முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி ஒதுக்கி, 1519 ஏரிகளை தூர்வாரப்பட்டது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதன் காரணமாக, இந்த ஆண்டு புதிதாக 1511 ஏரிகள் குளங்களில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பருவமழைக் காலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகப் போவதை தடுக்கும் நோக்கில், தடுப்பணை கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளில் நிறைவேற்றுவதற்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கி திட்டப் பணிகள் ஆரம்பிக்கக்கப்பட்டு விட்டன. இதன் மூலம் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கும்.

விவசாயிகள் வேளாண் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு மானிய விலையில் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவிக்கிறோம். இன்றைக்கு, இந்திய அளவில் உணவுதானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலிடம் வகித்து க்ரிஷ் கர்மாண் என்ற விருதை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாடு தன்னிறைவு பெறுகின்ற மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா டுடே என்ற பத்திரிகை எல்லா வகையிலும், எல்லா துறையிலும் சிறந்து விளங்குகின்ற முதல் மாநிலம் தமிழ்நாடு என்று அந்த விருதை தமிழ்நாட்டிற்கு கொடுத்தார்கள்.

அதேபோல், தமிழ்நாட்டில் தான் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று அதற்கும் விருது கொடுத்தார்கள். அம்மாவினுடைய ஆட்சியில்தான் சிறப்பான திட்டத்தை தமிழகத்திற்கு கொடுத்தார்கள். அதற்கு தொடர்ச்சியாக, அம்மா மறைவிற்குப் பிறகு, அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தில் கல்வியில் ஒரு புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறோம். கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கில், கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, கல்வித் துறைக்குத் தான் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆரம்பப் பள்ளி, ஆரம்பப் பள்ளி நடுநிலைப்பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை 2011ல் திமுக ஆட்சியில் 21 சதவீதமாக இருந்தது, இன்றைக்கு அது அம்மாவின் அரசு கல்வியில் எடுத்த புரட்சி, மறுமலர்ச்சி காரணமாக 46 சதவீதமாக உயர்ந்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது. இன்றைக்கு பள்ளிகளில் படிக்கின்றவர்களின் சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது. இதைவிட என்ன செய்யவேண்டும் ?

ஏழை, எளிய விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக, ஆடு, பசுமாடு, கொடுக்கும் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தியிருக்கிறோம், இந்தியாவில் வேறு எங்கும் இந்தத் திட்டம் இல்லை. இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி நிலையம் ஒன்று கூட்டுரோடு அருகில் 800 ஏக்கர் பரப்பளவில், பல நூறு கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சி செய்கின்ற பொய் பிரச்சாரம் அத்தனையும் முறியடிக்கப்படும்.

மக்களுக்குத் தேவையான கூட்டுக் குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்ட காவிரி நீர் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் தடையில்லாமல் வழங்கும் ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.

அம்மா இருக்கும்பொழுது, 65 கல்லூரிகள் கொடுத்திருக்கின்றார்கள், அம்மா மறைந்த பிறகு, 11 கலைக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறோம், மொத்தம் 76 கலைக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறோம். வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்தவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐ.டி.கல்லூரி என ஏராளமான கல்லூரிகளை கொடுத்த காரணத்தினாலே ஏழை, எளிய மக்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கக்கூடிய நிலை தமிழகத்தில் பார்க்க முடிகிறது.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு கொடுத்து, அதை கொண்டு செல்வதற்கு பை கொடுத்தார்கள். அறிவுபூர்வமான, விஞ்ஞான கல்வியை பெறவேண்டும் என்ற நோக்கில், கல்வி பயிலும் குழந்தைகளுக்கு விலையில்லா மடிக்கணினி அம்மா அவர்கள் கொடுத்தார்கள், இன்றைக்கு உலக அளவிலே விஞ்ஞானக் கல்வியை கொடுத்த அரசு அம்மாவின் அரசு. இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழகம் கல்வியிலே ஒரு முன்மாதிரி மாநிலமாக, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை வழங்கும் அரசை பார்த்து, இந்த ஆட்சியில் ஒன்றும் நடைபெறவில்லை என்று தவறான, பொய்யான பிரச்சாரத்தை எதிர்க்கட்சிகள் பரப்பி வருகின்றன, ஆனால் அது உண்மையல்ல. நான் சொன்ன அத்தனை திட்டங்களும், மக்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

வெயிலை பொருட்படுத்தாமல் இங்கே நிற்கின்ற பொதுமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து, மிகச்சிறப்பாக இந்த விழாவை நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அரசு

அதிகாரிகளுக்கும், வருகை தந்திருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**